## இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்

## ஆணையிடுபவர்: திருமதி.ச.வளர்மதி, இ.ஆ.ப.,

நக.அ3/8035/2023

நாள்: 30.11.2023

பொருள்: வன்கொடுமை தடுப்புச்சட்டம் திருத்த விதிகள் 2016 - கருணை அடிப்படையில் பணிநியமனம் - இராணிப்பேட்டை மாவட்டம் - அரக்கோணம் வட்டம் எண்.3, செம்பேடு மதுரா சோகனூர் கிராம காலனி, திரு.ர.அர்ஜீன் த/பெ ரவி என்பவர் பிற இனத்தவர்களால் கொலை செய்யப்பட்டது- இறந்த நபரின் மனைவி திருமதி.பு.லட்சுமி க/பெ (லேட்) அர்ஜீன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை :

1. திருமதி.பு.லட்சுமி க/பெ (லேட்) ர.அர்ஜீன் என்பவரின் மனு நாள்: 26.07.2021.
2. அரசாணை எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்: 08.03.2023
3. அரசாணை எண்.869, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 09.07.1990.
4. அரக்கோணம் வட்டாட்சியரின் கடிதம் நக.எண்.ஆ1/154/2021, நாள்:28.07.2021 & 31.10.2023.
5. அரக்கோணம், வருவாய் கோட்டாட்சியரின் கடிதம் நக.அ1/1598/2021, நாள்:19.08.2021 & 01.11.2023.
6. இராணிப்பேட்டை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடிதம் நக.கே5/716-3/2021, நாள்: 25.09.2023.
7. கூடுதல் தலைமைச்செயலர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதம் எண்.பணி4(1)/02-44/4/2023, நாள்:26.05.2023.
8. வேலூர், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குரின் கடிதம் ஒ.மு.எண்.004503/அ2/2023, நாள்: 10.10.2023.

***

**ஆணை:-**

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் கோட்டம் மற்றும் வட்டம், எண்.3, செம்பேடு மதுரா சோகனூர் கிராம காலனி, ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த திரு.ர.அர்ஜீன் த/பெ ரவி என்பவர் பிற இனத்தவர்களால் கொலை செய்யப்பட்டது. இறந்த நபரின் மனைவி திருமதி.பு.லட்சுமி க/பெ (லேட்) ர.அர்ஜீன் என்பவர் வன்கொடுமை தடுப்புச்சட்டம் - 2016 ன் படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரிய மனுவினை பரிந்துரை செய்து பார்வை-5 ல் காணும் கடிதம் மூலம் வரப்பெற்ற முன்மொழிவு பரிசீலனை செய்யப்பட்டது.

2) காலஞ்சென்ற நபர் திரு.ர.அர்ஜீன் த/பெ ரவி என்பவரின் மனைவி திருமதி.பு.லட்சுமி என்பவர் வன்கொடுமை தடுப்புச்சட்டம் - 2016 ன் படி தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரி பார்வை-1-ல் காணும் மனுவினை அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அளித்துள்ளார். மேற்கண்ட மனு திரு.ர.அர்ஜீன் த/பெ ரவி என்பவர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3). கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரும் தனியர் திருமதி.லட்சுமி க/பெ அர்ஜீன் என்பவர் 18 வயதினை நிறைவு செய்துள்ளார். மேலும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி அடைந்துள்ளார். இவரின் மதிப்பெண் சான்று உண்மைத்தன்மை வாய்ந்தது என பார்வை-8ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4). காலஞ்சென்ற நபரின் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியவில்லை என்றும், காலஞ்சென்ற நபரின் மனைவி கணவரின் இறப்பிற்கு பின் மறுமணம் ஏதும் செய்துகொள்ளவில்லை என்றும், காலஞ்சென்ற நபரின் மறைவிற்கு பின் அவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும் அரக்கோணம் வட்டாட்சியர் ஒருங்கிணைந்த சான்று அளித்துள்ளார்.

5) எனவே, காலஞ்சென்ற திரு.ர.அர்ஜீன் த/பெ ரவி என்பவரின் மனைவி திருமதி.பு.லட்சுமி க/பெ (லேட்) ர.அர்ஜீன் என்பவரை இராணிப்பேட்டை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

6) இவரது பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது எனவும், எந்த நேரத்திலும் முன்னறிவிப்பின்றி பணிவிலக்கம் செய்யப்படக்கூடியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7) தனியர் பணியில் சேரும்போது, நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில், உரிய மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட உடற்தகுதி சான்றினை அசலாக சம்மந்தப்பட்ட அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

ஓம்/-ப்பி.விஜயராகவன்,
மாவட்ட ஆட்சியருக்காக,
இராணிப்பேட்டை.

/உத்தரவுப்படி/

30.11.23
அலுவலக மேலாளர்(பொது)

பெறுநர்
திருமதி.பு.லட்சுமி க/பெ (லேட்) ர.அர்ஜீன்,
எண்.3, செம்பேடு மதுரா சோகனூர் கிராம காலனி,
அரக்கோணம் வட்டம்.

30/11/2023

நகல்: மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர், இராணிப்பேட்டை.